# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
# SECOND YEAR EXAMINATIONS IN COMMERCE (EXTERNAL) – 2006 / 2007
# Held in May 2007

## COM 26 – INTERNATIONAL ENVIRONMENT OF BUSINESS

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) சர்வதேச வர்த்தகம் பற்றிய உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்ட (Product Life Cycle of International Trade) கோட்பாட்டின்படி ஆரம்பத்தில் ஒரு பொருளை எந்த நாடு ஏற்றுமதி செய்கின்றதோ அந்த நாடே இறுதிவரை தேறிய ஏற்றுமதியாளராக இருக்கும்." இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஹெக்ஸர் - ஒலின் கோட்பாட்டை சுருக்கமாகக் குறிப்பிட்டு இக்கோட்பாட்டினை ஒட்டி ஏனைய பொருளியலாளர்கள் மேற்கொண்ட அனுபவரீதியான தரவுகளின் அடிப்படையிலான பரிசோதனைகளின் மீது நுணுக்கமாகக் கருத்துரைக்க.

(10 புள்ளிகள்)

02. (அ) A என்ற நாடு X பொருளை உற்பத்தி செய்கின்றது. (ஒப்பீட்டு நன்மையினைக் கொண்டுள்ளன – Comparative advantage) இந்நாடு B நாட்டிலிருந்து Y பொருளை இறக்குமதி செய்வதாகக் கொள்க.

(i) A நாடு B நாட்டுடன் வர்த்தகம் செய்கின்றது. ஆனால் A நாட்டின் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையைக் கருத்திற் கொள்ளாத நிலையில் ஏற்படும் நுகர்வு விளைவை வரைபட ரீதியாகக் காட்டுக.

(5 புள்ளிகள்)

(ii) தற்போது A நாட்டின் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலையை ஏற்றுக் கொள்வதனால் ஏற்படும் உற்பத்தி விளைவை விளக்குவதுடன், நுகர்வு விளைவு, உற்பத்தி விளைவு என்பவற்றை ஒரே வரைபில் காட்டுக.

(5 புள்ளிகள்)

(ஆ) காரணி விலைச் சமப்படுத்தல் கோட்பாட்டை விளக்கி, அது எவ்வாறு சர்வதேச வர்த்தகத்தின் மூலம் காரணி விலைகளைச் சமப்படுத்துகின்றதென்பதை பொருத்தமான வரைபடங்களை உபயோகித்து விளக்குக.

(10 புள்ளிகள்)

03. (அ) முதல் எழுத்துக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் பின்வரும் சொற்பதங்களை விரிவுபடுத்துவதுடன் அவை சர்வதேச, பிராந்திய வர்த்தகத்தில் எத்தகைய பங்களிப்பை கொடுக்கின்றன என்பதனை சுருக்கமாக விளக்குக.

(i) GATT
(ii) UNCTAD
(iii) PTA
(iv) EEC
(v) ASEAN

(10 புள்ளிகள்)

(ஆ) ஒருங்கிணைப்பின் இயக்கத்தன்மை வாய்ந்த விளைவுகளின் அடிப்படையில் தெற்காசிய வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தத்தை (SAPTA) மதிப்பீடு செய்வதுடன் அது எவ்வகையில் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்திலும் பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றது என்பதனை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

04. (அ) "கடந்த 20 வருடங்களிலும் உலகமயமாக்கல் செய்முறையின் கீழ் சர்வதேச வர்த்தகமானது வளர்முக நாடுகளிலும் பார்க்க வளர்ச்சியடைந்த நாடுகளுக்கே மிகக் கூடுதலான நன்மை பயப்பதாக உள்ளது." இக்கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? விளக்கிக் கருத்துரைக்க.

(10 புள்ளிகள்)

(ஆ) சென்மதி நிலுவைச் சமநிலை இன்மையினை சரிப்படுத்த இலங்கை அரசாங்கம் கையாண்டு வந்த நடவடிக்கைகள் யாவை என்பதைச் சுட்டிக்காட்டி அண்மைக் காலங்களில் இலங்கையின் சர்வதேச வர்த்தகப் போக்கு எவ்வாறு உள்ளது என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

05. (அ) சர்வதேச வர்த்தக சூழலைக் கட்டுப்படுத்துவதிலும் உலகமயமாக்கல் ஒழுங்கின் கீழ் சர்வதேச பொருளாதாரத்தைக் மீளக் கட்டியமைப்பதிலும் சர்வதேச நாணய நிதியமும் (IMF) உலக வர்த்தக அமைப்பும் (WTO) எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவன குறித்து சுருக்கக் கருத்துரைக்க

(i) வெளிநாட்டு நேரடி முதலீடும் (FDI) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியும்

(4 புள்ளிகள்)

(ii) சர்வதேச திரவத்தன்மை பிரச்சினை என்பதன் கருத்து யாது? இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(4 புள்ளிகள்)

(iii) மிக அண்மைக் காலத்தில் உலக சந்தையில் ஏற்பட்ட எரிபொருள் விலையேற்றம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திப் போக்கில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

(2 புள்ளிகள்)

***